திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, இந்த மணல்மேட்டி லுள்ள நூற்பாலையில் தொழில் தகராறு நடைபெற்றது எந்த ஆண்டு ? இப்பொழுது அந்த ஆலையில் எந்த விதமான தகராறுமில்லாமல் சுமுகமாக நடைபெறுகிறதுஎன்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு. திரு செ. மாதவன் : 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ம் தேதி அன்று நடைபெற்றது. இப்பொழுது சுமுகமாக நடை பெறுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்தப் பஞ்சாலைகளில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு "வேஜ் போர்டு" திட்டமுள்ளது. அந்த திட்டத்தின் அடிப்படையிலே கொடுத்தால் இப்படிப்பட்ட தகராறுகள் செய்ய முடியாத அளவுக்கு நிலைமை ஏற்படும். ஆகவே எல்லாக் கூட்டுறவு பஞ்சாலைகளிலும் அந்த அடிப்படையிலே திட்டத்தை நிறை வேற்றக்கூடிய அளவுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் கூறிய பதிலைக் கவனித் திருந்தால் இந்தக் கேள்வி எழுந்திருக்காது. இந்தத் தகராறு அப் படிப்பட்ட அடிப்படையில் எழவில்லை. "லே ஆஃப்" பற்றி எழுந்த தகராறுதான் இது.

தரங்கம்பாடிக்குக் குடி தண்ணீர் திட்டம்.

* 149 வினா.—**திரு. எஸ். கணேசன் :** மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாயூரம் வட்டம், தரங்கம்பாடியில் குடிதண்ணீர்த் திட்டம் அமைக்கக் கோரி பொது மக்களிடமிருந்தும், நகராட்சி மன்றத்தி லிருந்தும் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஏதும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) தரங்கம்பாடியில் குடிதண்ணீர்த் திட்டம் அமைக்கக் கோரி தரங்கம்பாடி மறுமலர்ச்சி மன்றத் திலிருந்தும் நகராட்சி மன்றத்திலிருந்தும் 1967 ஏப்ரல் மாதத்தில் விண்ணப்பம் வந்தது.

(இ) நிதி பற்றாக்குறையால் பஞ்சாயத்துக்கு குடிநீர்த் திட்டம் நிறை வேற்றுவதற்கு சர்க்காரால் தற்பொழுது இயலாது என்று அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, அந்தத் தொகுதி நாடாளு மன்ற உறுப்பினராகவும், மத்திய துணை அமைச்சராகவுமிருந்த ஒருவர் மத்திய சர்க்கார் உதவி பெற்று இந்தக் குடி தண்ணீர் திட்டத்தை நிறை வேற்றுவதாக அந்தத் தொகுதி மக்களுக்கு உறுதியளித்ததாக சொல்லிக்கொள்கிறார்கள். அப்படி ஏதேனும் மத்திய சர்க்கார் இந்த குடிதண்ணீர்த் திட்டத்திற்கு உதவி செய்ய முன் வந்துள்ளனரா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி மத்திய சர்க்கார் உதவி செய்ய முன் வந்திருப்பதாகத் தகவல் இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி : சார், தரங்கம்பாடி கடற்கரையோரம் மீன வர்கள் பெரும்பகுதி வாழும்பிரதேசம். அதையொட்டி மீனவர்களுக்குக் குடி தண்ணீர் நலனுக்காக திருச்சிராப்பள்ளியைத் தலைமையகமாகக் கொண்டு ஒரு ஸ்பெஷல் ஸ்கீமை கடந்த அரசு செய்து அதற்கு சர்வே செய்யப்பட்டது. அவ்வாறு தரங்கம்பாடிக்குக் கொண்டு வருவதன் மூலம் திருமுல்லைவாயல் போன்ற பகுதிகளுக்குக் குடிதண்ணீர் வழங்க அரசு

ஏற்பாடு செய்திருந்தது. அந்தத் திட்டம் என்னவாயிற்று ? அதன்கீழ் மீனவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இதைச் செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது பற்றிய தகவல் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்—முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்

பூந்தமல்லி குருடர் பள்ளி மாணவர்கள் நச்சுக்கலந்த உணவால் பாதிக்கப்பட்டது.

Mr. SPEAKER : The hon. Member, Thiru J. James has given notice of an adjournment motion.

Thiru J. JAMES : Sir, I have given notice of the following adjournment motion under Rule 42 of the Madras Legislative Assembly Rules :—

'That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance namely, the food poisoning which affected hundreds of students of the Government School for the Blind at Poonamallee on 3rd March 1968.'

தலைவரவர்களே, பூந்தமல்லி அரசாங்கக் குருடர் பள்ளிக்கூடத்தில் பயிலும் மாணவர்களில் 100 பேர் கடந்த 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ம் தேதியன்று இரவு விஷம் கலந்த பதார்த்தங்களைச் சாப்பிட்டதால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் சிலரின் நிலைமை இன்றும் மிகவும் கவலைக்கிடமாயிருக்கிறது. இது சாதாரண விஷயம் அல்ல. பொதுவானதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான பிரச்சினை என்பதில் சந்தேகமில்லை. இந்த மாணவர்கள் கலப்படம்செய்யப்பட்ட கடலை எண்ணெயினால் தயார் செய்யப்பட்ட பதார்த்தங்களைச் சாப்பிட்டதாகவும், அதனால் அவர்கள்—பாதிக்கப்பட்டிருப்பதாகவும் வதந்திகள் நிலவுகின்றன. கடலையெண்ணெய் விலை சரிந்த பொருட்களில் ஒன்று. அதனால் கடலையெண்ணெயில் கலப்படம் செய்யப்பட்டிருக்கும் என்று தெரிகிறது. இந்நிலையில் பொதுவானதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான இதைப் பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவரவர்களே, பேரவையின் நடவடிக்கைகளை ஒற்றிவைத்து விவாதிக்க வேண்டிய அளவுக்கு உள்ள பிரச்சினை அல்ல இது. அன்றாட சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடவடிக்கை எடுக்கத்தக்க, எடுக்க வேண்டிய பிரச்சினையாகும். 1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 3-ம் தேதியன்று மாலை 6½ மணிக்கு பூந்தமல்லி குருடர் பள்ளியில் இருப்பவர்களுக்கு உணவு வழங்கப்பட்ட நேரத்தில் வாந்திபேதி வந்த காரணத்தால் 91 பேர் சென்னை மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டார்கள். அவ்வாறு அவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட வேண்டுமென்று அங்குள்ள டாக்டர்கள் கூறிய ஆலோசனையின் பேரில் அவர்கள் பெரிய மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்கள். 91 பேர் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு இரவு ஒரு மணி வரையிலும் அவர்களுக்கு தக்க சிகிச்சைகள் அளிக்கப்பட்டது. மறுநாள் 4 பேர் சேர்க்கப்பட்டனர். ஆக மொத்தம் 95 பேர்கள் சேர்க்கப்பட்டனர். அதில் 52 பேர் நலமுற்று திருப்பி அனுப்பப்பட்டு விட்டார்கள். மற்றவர்களும் நலமுற்று திருப்பி அனுப்பப்பட்டு விடுவார்கள் என்று செய்திகள் கொடுத்திருக்கிறார்கள். யாருக்கும் அபாயம் ஏற்படும் சூழ்நிலை இல்லை. எதன் காரணமாக அது நேர்ந்திருக்கக்கூடும் என்பதுப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட காவல்துறை தலைமை அதிகாரியும் உடனே பார்வையிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணையின் பேரிலே சுகாதார அதிகாரி